RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s86

OPEN ACCESS



# எஸ்.ஆர்.ஜி. சுந்தரம் சிறுகதைகளில் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள்

**கு. பிரியா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா.

# Biographical and Cultural Elements in S.R.G. Sundaram’s Short Stories

**K. Priya** [a, *]

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: priyakarthik55@gmail.com

Received: 01-05-2021
Revised: 28-04-2022
Accepted: 01-05-2022
Published: 27-06-2022

Check for updates

**ABSTRACT**

Culture is the one that interacts with the lives of living people from ancient times to the present day and from time to time. S.R.G. Sundaram, who is awarded with ‘Bharathi Paniselvar’, is a multifaceted literary creator. Our Tamil world is well aware of his contribution to the development of Tamil. Like Valliyappa, he is also a prolific writer, who has made significant contributions in the form of short stories, plays, novels, songs, essays, and short stories for children. S.R.G. Sundaram has been doing his work since the age of seventeen (since 1957) and still does it today with deep knowledge and creative thinking. In his short stories, many cultural elements are found, such as love, rationality, hospitality, friendship, loneliness, love for life, diligence, punctuality, and patriotism. The purpose of this study is to explore and sort them out.

**Keywords:** S.R.G. Sundaram, Biographical and Cultural Elements, Children, Short Stories

## முன்னுரை

‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ என்று கலித்தொகை கூறுகிறது. பண்டைய தமிழர்கள், பண்பாடுகளில் சிறந்து விளங்கிய தன்மையைச் சங்க இலக்கியங்களில் வாயிலாக நன்கு அறிய முடிகிறது. தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றிய பிற தமிழ் இலக்கியங்களிலும் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன.

பாவாணர், பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. முன்னது அகக்கூறு என்றும் பின்னது புறக்கூறு என்றும் கூறுவார். உள்ளத்தின் உணர்வுகள் வெளிப்படுத்தும் நற்செயல்களைப் ‘பண்பாடு’ என்றும் உள்ளத்திற்குப் புறம்பான உணவு, உடை, உறையுள், தொழில்கள், ஆட்சிமுறை, போர்முறை, கலை, இலக்கியம, சமயம், இவற்றை ‘நாகரிகம்’ என்றும் கூறலாம் (Thevaneyap Paavaanar, 2009).

எண்ணற்ற பண்பாட்டுக் கூறுகளுள், சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் விருந்தோம்பலும், ஈகையும் முக்கிய பண்பாடுகளாகக் கருதப்படுகின்றன (Rasamanikanar, 1996). இல்லக்கிழத்தியின் வாயிலாக விருந்தோம்பும் பண்பும், வள்ளல்கள் வாயிலாக கொடைப்பண்பும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இல்லக்கிழத்தி, யாரேனும் வருவார்களோ? என்று காத்திருந்து, அறிமுகமில்லாதவராக இருப்பினும் உள்ளன்போடு வரவேற்று உபசரித்து உணவளிக்கும் பண்பாடு காலங்காலமாக தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது. இல்லக்கிழத்தியின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகவே கருதப்படுகிறது.

இல்லற வாழ்வில் விருந்தோம்புதல் பண்டைத் தமிழரின் மேற்கொண்ட தனிப்பட்ட பண்பாடாகும் என்பதை,

“உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்

தமியர் உண்டலு மிலரே”

என்று புறநானூறு கூறுகிறது. இதன் தொடர்ச்சியாக, காப்பியக் காலத்தில், கண்ணகி, கோவலன் பிரிந்து சென்ற காலத்திலும், விருந்தோம்பலைச் செய்ய முடியவில்லையென வருந்தும் நிலையைக் காண முடிகிறது (Duraisamipillai, 1996). பண்டைய கால மக்கள் மனிதர்களுக்கு மட்டுமன்றி செடி கொடிகளுக்கும் உற்றுழி செய்து உறுபொருள் நல்கியதற்குக் கடையேழு வள்ளல்களே நற்சான்றுகளாக அமைவர்.

மனிதனுடைய அன்றாட வாழ்வியலில் ஒன்றிக் காணப்படுவதே ‘பண்பாடு’ என்று கூறலாம். பண்டைய மக்கள் வணிகம் செய்யும் போது,

“கொள்வதூஉ மிகைக் கொளாதுகொடுப்பதூஉம் குறைபடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்”

என்று பட்டினப்பாலை கூறுகிறது (Maraimalai Adigal, 1906). இதன்மூலம் பண்டமாற்று முறையில் கூட, பண்பாடு மிளிர்வதைக் காணமுடிகிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறந்தரவாரா”

என்ற கணியன் பூங்குன்றனார் பாடலில் கூட, உயரிய பண்பாடு காணப்படுகிறது (Duraisamipillai, 1996).

குமண வள்ளல், காட்டில் சந்தித்த வறுமையுடைய புலவருக்கு உதவ, தன் தலையைக் வெட்டி எடுத்துக் கொள்ளுமாறு வாளைத் தந்தான். தான் காட்டில் வாழ்வதைக் காட்டிலும் புலவரின் வறுமைக் கொடியது. அதைப் போக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தான். அவ்விதம் பண்பாடு மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ள பெருமை நம் தமிழரையே சாரும்!

## பண்பாடு - சொல் விளக்கம்

பண்பாடு என்ற சொல்லைப் பற்றி ஆராயும்போது, ‘பண்பாடு என்ற சொல் இரசிகமணி டி.கே.சி. யால் உருவாக்கப்பட்டது’ என்று கூறுவர் (Iraiyarasan, 1993).

தாளாண்மை, வேளாண்மை, தன்மானம், நன்றி மறவாமை என்பன தமிழரின் பிற பண்பாட்டுக் குணங்களாகும். இப்பண்பாட்டுக் கூறுகள், பண்டைய கால மக்களின் வாழ்வியலைக் கூறும் புறநானூற்றில் நிறைந்துக் காணப்படுகின்றன.

“உலக அமைப்பில் முதல், கரு, உரி என மூன்றாக வகுத்து, உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம் என்றும் புறம் என்றும் பாகுபடுத்தி, அதை இயற்கையுடன் இயைபுறுத்தியது பண்டைத் தமிழரின் சிறந்ததொரு பண்பாடாகும்” (Pillai, 1979). மனிதன் இயற்கையோடு ஒன்றி, இயற்கையில் காணும் பொருட்களைப் பிரித்து அந்நிலைக்கு ஏற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். அவன் மேற்கொண்ட நற்செயல்கள் நாளடைவில் பண்பாடுகளாயின. இவ்வாறாகப் பண்பாடு பற்றிப் பல்வேறு அறிஞர்கள் தம் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

## உயிர்களிடம் அன்பு வேண்டும்

மனிதர்களிடம் காணப்படும் நற்பண்புகளுள் மேன்மையானது, உயிர்களிடம் அன்பு காட்டுவதாகும். அதனினும் மேலானது 'பகைவரிடம் அன்பு காட்டுவது' என்று கூறுவர். எஸ்.ஆர். ஜி.சுந்தரம் அவர்களின் சிறுகதைகளில் இப்பண்பானது வெளிப்படுகின்றன.

"வீணா வீட்டு லட்டு" என்னும் சிறுகதையில், வீணா, 'லட்டு' என்னும் நாய் மீது மிகுந்த அன்பு செலுத்தி வளர்த்தாள். நேரந்தவறாமல் வீணா, 'லட்டு' நாய்க்குத் தேவையான பாலையும் பிஸ்கட்டையும் தந்து உண்பிப்பாள். பிறகு ஒருநாள், கடைத்தெருவிற்குப் போகும் போது நேரமாகும் என்பதால் தன் சகோதரன் கிட்டுவிடம் லட்டுவிற்கு உணவு அளிக்குமாறு சொல்லிவிட்டு வந்தும் கிட்டு உணவளிக்காததை எண்ணி வருந்தினாள். உடனே லட்டு நாய்க்கு உணவளித்தாள்.

"தோகை ராஜா" என்ற சிறுகதையில் வரும் பூரணியின் குடும்பம் பச்சை வயல்கள் சூழ்ந்த கிராமத்தில் அமைந்திருந்தது. அருகிலேயே மலைத்தொடரும் இருந்தமையால் மயில்கள் வாழ மிகவும் ஏற்றதாக இருந்தது. அதனால் மயில்கூட்டம் அங்கே காணப்பட்டது. பூரணி அம்மயில் கூட்டத்திலுள்ள ஒரே ஒரு மயிலுக்கு விரிந்த அடர்த்தியான தோகை இருந்தது. அந்த மயிலுக்குத் "தோகை ராஜா" என்று பெயரிட்டு அன்பு செலுத்தி வந்தாள். பூரணி, தோகை ராஜா என்று அழைத்ததும் "ஒரே நிமிடந்தான்: தோகை ராஜா வேகமாகப் பறந்து அவள் அருகில் வந்துவிட்டது. பூரணி தயாராக வைத்திருந்த வேர்க்கடலைகளை நீட்டினாள்: அவள் உள்ளங்கையிலிருந்து அவற்றைத் தோகை ராஜா அழகாகக் கவ்வி எடுத்து தின்றது." என்று தாய்மண் உலா நூலில், தன் அப்பா மயிலின் தோகையை விற்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதை அறிந்து அம்மயிலைக் காப்பாற்றுகின்றாள் (Sundaram, 2017). இவ்விரு கதைகளின் வாயிலாக, வீணா மற்றும் பூரணி ஆகியோர் உயிர்களிடம் அன்பு செலுத்தி வந்ததை உணர முடிகின்றன.

## பகைவனுக்கும் அருளும் மனப்பான்மை

பகைவனுக்கும் அருளும் தன்மையானது, சங்க இலக்கியம் முதல் இன்றளவும் இலக்கியங்களில் காணப்படுகின்ற ஒன்று. பகைவனுக்கு அருளுதல் என்பது மிகச் சிறப்பான குணங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அத்தகைய போற்றுதற்குரிய பண்புகளுள் ஒன்றான பகைவருக்கும் அருளும் மனப்பான்மையைத் தம் சிறுகதை வாயிலாக வெளிப்படுத்துகின்றார், எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்.

"நல்ல எருமை நல்ல யானை" என்ற சிறுகதையில், எருமையின் முதுகைக் காகம் கொத்திக் கொத்தித் துன்புறுத்திக் கொண்டிருக்கும். அப்போது தன்னைக் காகத்திடமிருந்து காப்பாற்றுமாறு பூனை, ஆடு, வரிக்குதிரை ஆகியோரின் உதவியை நாடும். ஆனால் உதவ யாரும் முன்வரவில்லை. இருப்பினும் தனக்கு உதவாத பூனை, ஆடு, வரிக்குதிரை ஆகியவற்றை காட்டுத்தீயிலிருந்து எருமை காப்பதாக எழுதியுள்ளார்.

'மணி வளர்த்த கிளி' என்ற கதையில் வருகின்ற கிளியானது, தனக்குத் தீங்கிழைத்த வேலப்பனிடம் பகைமையைப் பாராட்டாமல், வேலப்பனையும் அவனுடைய பணத்தையும் திருடனிடமிருந்து காப்பாற்றுவதாகக் கதையை அமைத்துள்ளார்.

"தோகை ராஜா" என்ற சிறுகதையில், பூரணியின் அப்பா, தன்னையும் தன் இனத்தையும் அழிக்க, தானியத்துடம் மருந்திட்டதை அறிந்தும் தோகை ராஜா மயிலானது, பாம்பிடமிருந்து யாரேனும் என்னைக் காப்பாற்றுங்கள் என்று பூரணியின் அப்பா கத்தியதைக் கேட்டவுடன், "அங்கிருந்த தோகை ராஜா மின்னல் வேகத்தில் பாம்பின்மீது பாய்ந்தது. அதைக் கீழே தள்ளியது தன் நீண்ட அலகால் அந்தப் பாம்பின் கழுத்தை கெட்டியாகக் கௌவிப் பிடித்துக் கொண்டு, வெளியே பறந்து மறைந்தது என்பதிலிருந்து தனக்கும் தன் இனத்திற்கும் பகைவனாயிருக்கும் பூரணியின் அப்பாவிற்கு அருளிய பாங்கு, தோகை ராஜா எனும் சிறுகதை மூலம் விளக்கியுள்ளார், எஸ்.ஆர்.ஜி.சுந்தரம். இவ்வாறாக

எருமை, கிளி, 'பூரணி' என்ற கதாபாத்திரங்களின் மூலம் பகைவருக்கும் அருளும் மனப்பான்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஒற்றுமையுணர்வு

எஸ்.ஆர்.ஜி.சுந்தரம் சிறுகதைகளில் ஒற்றுமையுணர்வு என்ற உயரிய பண்பு, கதையினூடே இழையோடுகின்றது.

'வயிறு சொன்ன உண்மை' என்ற சிறுகதையில், கை, கால், வாய், வயிறு ஆகிய உறுப்புகள் 'தான் தான் பெரியவன்' என்ற ஆணவத்துடன் சண்டையிடுகின்றன. முடிவில் அனைத்து உறுப்புகளும் 'ஒற்றுமையே உயர்வு' என்பதை உணர்கின்றன.

'பல்சக்கரம்' என்ற சிறுகதையில், தேசிய ஒருமைப்பாட்டு நாள் முன்னிட்டு விழா துவங்க இருந்தது. அவ்விழாவின் தலைவர் விழாவில் நடக்கும் போட்டியில் வெற்றிப் பெறுவோர்க்கு சைக்கிள் பரிசாக வழங்கத் திட்டமிட்டுள்ளார். முதலில் உயர்ந்த மதிப்பெண் பெற்ற மாணவனுக்கு வழங்கவே எண்ணினார். அதன் பிறகு அனைவரும் உயர்ந்த மதிப்பெண் பெற்றிருந்ததை அறிந்தவுடன் அதைப்பற்றி சிறுவர்களிடமே கேட்டார். ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமாகக் கூற தொடங்கினர். அப்போது ஒரு சிறுவன், இந்தியாவில் எந்த மாகாணம் மற்ற மாகாணங்களை விடச் சிறந்ததோ அம்மாநிலம் சார்ந்த சிறுவனுக்குக் கொடுத்துவிடலாம் என்று யோசனை கூறினான். அங்கிருந்த சிறுவர்கள், மராட்டியம், பஞ்சாபி, குஜராத், தமிழகம், ஆந்திரா, கேரளா, காஷ்மீரம், கன்னடம் - இப்படிப் பல மாகாணங்களுக்குரிய சிறுவர்கள். அதனால் ஒவ்வொருவரும் அவரவர் மாகாணங்களுக்குரிய பெருமைகளைப் பேசினார்கள்.

அப்போது அங்கிருந்த சைக்கிளின் உதிரிப் பாகங்களான ஹேண்டில்பார், சக்கரம், பிரேக், பெடல், டியூப் போன்ற ஒவ்வொன்றும் 'நான் இல்லாவிட்டால் சைக்கிள் இல்லை' என்று சண்டையிட்டுக் கொண்டன. உடனே சைக்கிள் 'பிரேம்' ஒற்றுமையுணர்வுடன் நாம் செயலாற்ற வேண்டும் என்று பண்பை அறிவுறுத்தியது. பிறகு சிறுவர்களை நோக்கி, "உங்கள் மாநிலங்கள் வேறுவேறாக இருக்கலாம்! என்றாலும் அவை தனித்தனிப் பெருமை படைத்தவை. பாரதப் பண்பாடு என்ற நூலில் கோர்க்கப்பட்ட முத்துகள். உண்மையில் நீங்கள் ஒவ்வொருவரும் தேச முன்னேற்றம் எனும் பலனைத் தரும் ஓர் இயந்திரத்தின் பல்சக்கரங்கள் போன்றவர்கள்! பல்சக்கரத்தில் ஒரு சக்கரம் சுற்றாவிட்டாலும் இயந்திரம் இயங்காது! எனவே எங்கள் இந்தியா! எவரும் இந்தியர் என்று ஒற்றுமையுணர்வு எனும் பண்பை வளர்த்துக் கொள்ளுங்கள்" என்று சைக்கிள் பார் அறிவுறுத்துவது போல் கதையை அமைத்துள்ளார், ஆசிரியர் (Sundaram, 1985).

## பகுத்துண்ணும் பண்பு

பகிர்ந்துண்ணல் அனைவருக்குமுள்ள சிறந்த பண்பாகும். அப்பண்பைச் சிறுவயது முதலே குழந்தைகளுக்கு மனதில் பதிவு செய்ய வேண்டியது நம் அனைவரின் கடமையெனக் கொள்ளலாம். சங்க இலக்கியங்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில்,

"குப்பை வேளை உப்பிலி வெந்ததை

மடவோர் காட்சி நாணிக் கடைஅடைத்து

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன்மிசையும்"

என்ற பத்துப்பாட்டு வரிகளில், உப்பில்லாது சமைத்த வேளைக் கீரையைக் கூட சுற்றத்தோடு உண்ட நிகழ்வைக் காணமுடிகிறது (Narayana Velupillai, 1994).

'காகம் தந்த பாடம்' என்னும் சிறுகதையில், மீனாவும் அம்பிகாவும் போட்டியில் வென்றமைக்காக விலையுயர்ந்த மிட்டாய்ப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அதைக் கண்டதும் பரிசு கிடைக்காத மற்ற தம்பி, தங்கைகள் அவர்களுக்கு மிட்டாய்களைத் தருமாறு கேட்டனர். அதற்கு

மீனாவும் அம்பிகாவும் தங்களுக்குக் கிடைத்த பரிசு. தாங்களே அதை முழுவதுமாக உண்ண விரும்புவதாகக் கூறியதை மீனா-அம்பிகாவின் அப்பா அறிந்தார். உடனே அவர், அந்தக் குழந்தைகளுக்கு வேறு மிட்டாய்களைக் கொடுத்தார். அடுத்த நாள், மீனா- அம்பிகா, காக்கை தனக்குக் கிடைத்த சிறு உணவைக் கூட மற்ற காக்கைகளையும் கூப்பிட்டு பகிர்ந்துண்ணும் என்று கூறியுள்ளார். இக்கதையைப் படிக்கும் குழந்தைகள் இப்பண்பை நன்கு உணருதல் நிச்சயமானதொன்று. இக்கதையைப் படித்தப்பின், தான் உண்ணும்போது, வீட்டிலும் சரி, பொதுஇடங்களிலும் சரி, தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பகிர்ந்துக் கொடுக்கும் பண்பே தோன்றும்.

## நட்பு

விருப்பு வெறுப்பின்றி, ஏற்றத்தாழ்வின்றி மனமொத்தவர்கள் ஒன்றிஉறவாடுவதே நட்பாகும். அந்நட்பைப் பற்றி,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பதே நட்பு"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார் (Parimelalhagar, 2002).

'எது அவசியம்?' என்ற சிறுகதையில் உலா வரும் சஞ்சீவ், தான் நட்புக் கொண்ட மணிவேலைத் தன் வீட்டிற்கு அழைத்து, உணவளிக்க வேண்டுமென நாட்டம் கொள்கின்றான். ஆயினும் தன் குடிசை வீட்டிற்கு வருவானா? என்றெண்ணியே அவனைத் தன்வீட்டிற்கு அழைக்கத் தயங்கினான். இதையறிந்த மணிவேல் நட்பிற்கு அன்புணர்வே தேவையென்று தெளிவுறுத்துகின்றான்.

## நன்றி மறவாதிருத்தல்

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற குறள், நன்றியின் பெருமையை உணர்த்தும் (Parimelalhagar, 2002).

'குட்டித் திமிங்கிலமும் கெட்டிக்கார மீன்களும்' என்ற சிறுகதையில், செம்படவர்கள், கடலில் வாழும் பொடிமீன்களைப் பிடிக்க வலையை வீசினர். அப்பொடிமீன்கள் அங்கிருந்த திமிங்கிலத்திடம் உதவிக் கேட்க, திமிங்கிலமும் உதவிச் செய்து பொடி மீன்களைக் காப்பாற்றியது. திமிங்கிலம் இருக்கும் வரை பொடிமீன்களைப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்த செம்படவர்கள், புதிய விசைப் படகுடன் பெரிய இரும்பு வலைக் கொண்டு திமிங்கிலத்தைப் பிடித்தனர். அவர்கள் கரைக்குச் செல்லும் முன் திமிங்கிலத்தைக் காக்க வேண்டி, பொடிமீன்கள் விலாங்குமீன்களை நாடிச் சென்றன. "இந்த விலாங்கு மீன்களுக்குத் தனி சக்தி உண்டு. தங்கள் உடலில் மின்சார சக்தியை உண்டு பண்ணி எதிரிகளைத் தாக்கும் சக்தி கொண்டவை. அதுவும் இங்கிருந்த இந்த விலாங்கு மீன்கள் மின்சக்தி உண்டாக்குவதில் தனித்திறமை கொண்டவை!" என்ற செய்தியை அறிந்திருந்த பொடி மீன்கள் அவற்றிடம் உதவிக் கேட்க, விலாங்கு மீன்களும் உடனே செயல்புரிந்து திமிங்கிலத்தைக் காப்பாற்றின. இதன் மூலம் பொடிமீன்கள் தனக்குதவிப் புரிந்ததிமிங்கிலத்தைக் காத்து நன்றியுணர்வுடன் நடந்துக் கொண்டதைக் காண முடிகிறது.

## ஆபத்தில் உதவுதல்

'பறக்கும் முயல்' என்ற சிறுகதையில், சக்திவேல் என்பவன் பலூன் வியாபாரம் செய்து வந்தான். அவன் வீட்டில் குட்டிமுயல் மற்றும் மணிப்புறாவை வளர்த்துவந்தான். முயலானது மணிப்புறாவைப் போல தாமும் பறக்க வேண்டுமென்று ஆசைப்பட்டது. சக்திவேல், ஹீலியம் வாயு அடைக்கப்பட்ட பலூன்களை விற்கத் தயார் செய்து வைத்திருந்தான். அதைக் கண்டதும் குட்டிமுயல் பலூன்களை நெருங்கிவந்து அதன் முடிச்சுகளைத் தன் முன்னங்காலால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. அடுத்த

நிமிடத்தில் நூற்றுக்கணக்கான பலூன்களுடன் குட்டிமுயல் பறக்க ஆரம்பித்தது. அதைக் கண்ட மணிப்புறா குட்டிமுயலை எச்சரித்தது. அப்போதும் குட்டிமுயல் பறப்பதை நிறுத்தவில்லை. குட்டிமுயல் உயர உயர பலூன் கொத்துடன் பறந்தது. அதே சமயம் குட்டிமுயலுக்கும் அதிக உயரம் சென்றதும் பயம் வந்தது. உடுக்கை இழந்தவன் கைபோல, முயலைக் காக்க வேண்டி, மணிப்புறா பலூன் கொத்தில் ஓட்டைப் போட்டத் தொடங்கியது. குறைந்த அளவு பலூன்களால் குட்டிமுயலைத் தூக்க முடியாததால் கீழே இறங்கியது. இக்கதையின் மூலமாக மணிப்புறா, ஆபத்தான நேரத்தில், உதவியதை அறிய முடிகிறது.

## முடிவுரை

பண்டைய மக்களின் வரலாற்றோடு அவர்தம் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். செவ்வியல் இலக்கியங்கள் தோன்றிய காலம் முதல் இன்றளவும் எழுந்துள்ள இலக்கியங்கள் வரை பண்பாடு பற்றிப் பேசுகின்றன. இக்கட்டுரை மூலம் சிறுவர் இலக்கியம் வாயிலாகவும் சிறார்க்களுக்குரிய பண்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது என்பது தெற்றெனத் தெரிகின்றது. எஸ்.ஆர்.ஜி.சுந்தரம் அவர்கள்தம் சிறுகதையில், சிறார்களுக்குரிய எண்ணற்ற பண்பாடுகள் விரவி காணப்படுகின்றன. தொல்காப்பியர் காலம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பரமார்த்தகுரு கதைகள் என காலநிலைகள் மாறினாலும், சிறுவர்களின் பண்பாடுகளில் சிறு சிறு மாற்றங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. இவருடைய ஒவ்வொரு படைப்புமே பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சமுதாய மாற்றங்களால் பண்பாடுகள் குறைந்தளவு மாற்றங்கள் ஏற்பட்டதே ஒழிய ஏற்றத்தாழ்வு ஏற்பட்டதில்லை. இன்னும் அறுதியிட்டு சொல்ல வேண்டுமானால் ஏற்றங்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. இவருடைய படைப்புகள் ஒவ்வொன்றிலும் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் மாமரம், நண்டு, காக்கை, மீன்கள், கிளி, யானை போன்ற கதாபாத்திரத்தின் வழியாகக் கதைக்கூறும் போக்கு காணப்படுவது வியக்கத்தக்கதொன்றாகும். சிறுவர்கள் இச்சிறுகதைகளைப் படிப்பதால், நற்குணங்களுடன் திகழ்வார்கள் என்பதை உறுதியுடன் கூறலாம்.

## References


Duraisamipillai, A.S., (1996) Puranaanooru, Kazhaga Veliyedu, Chennai, India

Iraiyarasan, P., (1993) Tamill ilakkiya varalaru, Poompuhar Pathippagam, Chennai, India

Maraimalai Adigal, (1906) A critical commentary on Pattinappalai, Chennai, India

Narayana Velupillai, (1994) Pathupattu, Mullai Nilayam, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India

Pillai, K.K., (1979) Tamilaga Varalarum Makkal Panpadum, International Institute of Tamil Studies, Chennai, India

Rasamanikanar, M., (1996) Tamilmohzi Ilakiya Varalaru Sanga Kalam, Poonkodi Pathippagam, Chennai, India

Sundaram, S.R.G., (1985) Pongal Parisu, Parkdal Pathippagam Chennai, India

Sundaram, S.R.G., (2017) Thaiman Ula, Parkdal Pathippagam Chennai, India

Thevaneyap Paavaanar, G., (2009) Pandaith Tamil Nagarimum Panpadum, (1st Ed,) Poompuhar Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License